கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 02.07.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் காட்-பி ல் வெற்றி பெற்ற பி.டெக் மாணவர்களுக்கு பாராட்டு

கிராஜீவேட் ஆப்டிட்யூட் டெஸ்ட் பயோடெக்னாலஜி காட்-பி 2024 ஆனது 2024 - 25 ஆம் கல்வியாண்டில் பயோடெக்னாலஜியில் டிபிடி-ஆதரவு முதுகலை (டிபிடி பிஜி) திட்டங்களுக்கான சேர்க்கைக்காக ஏப்ரல் 2024 - இல் தேசிய தேர்வு முகமையால் நடத்தப்பட்டது. மேற்கூறிய திட்டத்தில் சேர்க்கைக்காக இந்தியா முழுவதும் 127 நகரங்களில் கணினி அடிப்படையிலான தேர்வு நடத்தப்பட்டது. த.வே.ப.க பயோடெக்னாலஜியில் பங்கேற்ற மாணவர்களில் ஒன்பது பேர் காட்-பி தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். த.வே.ப.க மாணவர்களில் திரு. யோகராஜ் (150) அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மேலும் மாணவர்கள் செல்வி. டீ. அர்ச்சிதா (142), செல்வி. எஸ் ரிதன்யா (133), திரு. பி. கீர்த்திவாசன் (131), திரு. பி. தினேஷ் (130), செல்வி.எக்ஸ்.எஸ். பபீனா (128), திரு. எஸ். அஜித் (115), செல்வி.பி.ஏ. அருள்யாழினி (111.5) மற்றும் திரு எல். ராஜாராம் (105.5). தேர்ச்சி பெற்றுள்ளனர். காட்-பி தேர்வு 2024 இன் முடிவுகள் மதிப்பெண் அட்டை வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. காட்-பி 2024 இன் தகுதியான விண்ணப்பதாரர்கள் பயோடெக்னாலஜி மற்றும் அது சார்ந்த அறிவியலில் டிபிடி ஆதரவு பெற்ற முதுகலை (டிபிடி பிஜி) திட்டங்களுக்கு அனுமதிக்கபடுகிறார்கள்.

ஒன்பது மாணவர்களில் ஐந்து பேர், திரு. யோகராஜ் (150), செல்வி. டீ. அர்ச்சிதா (142), செல்வி.எஸ் ரிதன்யா(133), திரு.எஸ்.அஜித் (115), திரு எல்.ராஜாராம் (105.5) ஆகியோர் கேரள மாநிலம் கொச்சியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கடல் உயிரித் தொழில்நுட்பத் திட்டத்தில் எம்.டெக் படிப்பிற்கான இடத்தைப் பெற்றறுள்ளனர் மற்றும் அவர்களுக்கு உதவித்தொகையாக மாதம் ரூ. 12000/- வழங்கப்படும். ஒன்பது மாணவர்களும் மும்பையின் இன்ஸ்டியூட் ஆப் கெமிக்கல் டெக்னாலஜி வழங்கிய தகுதிப் பட்டியலில் உள்ளனர். அவர்களின் கலந்தாய்வு விரைவில் நடைபெறும்.

காட்-பி தேர்வில் சிறப்பாக செயல்பட்ட பயோடெக்னாலஜி மாணவர்களை த.வே.ப.க துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி பாராட்டினார். முதன்மையர் (முதுகலை அறிவியல்) & இயக்குநர் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர் ந.செந்தில் மாணவர்களை பாராட்டியோதோடு காட்-பி தேர்வு எப்போதும் பி.டெக் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதாக குறிப்பிட்டார். பயோடெக்னாலஜி மாணவர்கள் நாடு முழுவதும் உள்ள பல பயோடெக் நிறுவனங்களில் உயர்கல்விக்கான கதவுகளைத் திறக்கிறார்கள். பல பயோடெக்னாலஜி முன்னாள் மாணவர்கள் சிறந்த பணிகளை செய்து உயிரித் தொழில் நுட்ப ஆராய்ச்சியில் உயர்ந்த தரத்தை நிலைநாட்டி வருகின்றனர். அவர்கள் பல மதிப்புமிக்க தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களால் பணியமர்த்தப்படுகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டு மாணவர்களை ஊக்குவித்து பாராட்டினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***